Crlmp No. 7530/2024 in CC.74/2019– PW–7–தர்மராஜ்

07.12.2024

Time 04.05 PM

எதிரி தரப்பில் அ.சா.7 யை திரும்ப அழைக்கக் கோரி மனு தாக்கல் செய்ததன் பேரில் திரும்பவும் இன்று அழைக்கப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–

1. சுமார் 6 மாதங்கள் வேலை பார்த்தோம். தங்குவதற்கு சேம்பரில் ஓலைக்குடிசை அமைத்துக் கொடுத்தார்கள். நாங்கள் சம்பளத்தில் காய்கறி வாங்கிச் சமைத்து சாப்பிட்டு வந்தோம். வாரம் ஒரு முறை சம்பளம் தருவார்கள் என்று முதல் விசாரணையில் கூறிய விபரங்களை போலீசார் விசாரித்தபோது தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல.

2. வாரத்திற்கு ரூ.5000/–வரை சம்பளத்திற்கு வேலை செய்தால் அதில் மூன்றில் 2 பங்கை பிடித்துக்கொண்டு 1 பங்கை எங்களுக்கு கொடுப்பார்கள். மீதி பணத்தை அட்வான்ஸ் தொகையில் கழித்துவிடுவார்கள் என்று முதல் விசாரணையில் கூறிய விபரங்களை போலீசார் விசாரித்தபோது தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல.

3. எனக்கும் எனது மனைவிக்கும் சேர்த்து ரூ.40,000/–அட்வான்ஸ் தொகையாகக் கொடுத்தார்கள். நாங்கள் தினமும் அதிகாலை 04.00 மணியிலிருந்து மாலை 07.00 மணி வரை வேலை செய்வோம். ஊரில் நல்லது கெட்டது எதுவும் நடந்தால் மனைவி மட்டுமே செல்ல அனுமதித்தார்கள். நாங்கள் செல்லமுடியாது. இந்த விபரங்கள் அனைத்தும் உரிமையாளருக்குத் தெரியும். தினமும் காலையிலும், மாலையும் சேம்பருக்கு வருவார். நாங்கள் வேலை செய்வதை பார்ப்பார் என்று முதல் விசாரணையில் கூறிய விபரங்களை போலீசார் விசாரித்தபோது தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல.

4. பின்னர் ஒரு நாள் எங்களை மிரட்டி கார்த்திக் என்பவரை உரிமையாளரான ஆஜர் எதிரி கம்பால் அடித்தார். சேம்பருக்குள் கோடு போட்டு வைத்து வந்தால் உங்களுக்கும் அடி விழும் என்று மிரட்டுவார். பின்னர் அபிராமம் மற்றும் திருச்சுழி வட்டாட்சியர் மற்றும் அபிராமம் போலீசார் வந்து எங்களை மீட்டு திருச்சுழிக்கு அழைத்துச் சென்றார்கள். மறுநாள் ஊருக்கு அனுப்பி வைத்தார்கள் என்று முதல் விசாரணையில் கூறிய விபரங்களை போலீசார் விசாரித்தபோது தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல.

5. கார்த்திக்கை எதிரி போலீசார் வந்து எங்களை மீட்பதற்கு 4 நாட்களுக்கு முன்பு அடித்தார். கார்த்திக்கை அடித்ததற்கு கார்த்திக் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். போலீசார் சேம்பருக்கு வந்தார்கள்.

6. காரியாபட்டி, நரிக்குடி வட்டாட்சியர், அருப்புக்கோட்டை வட்டாட்சியர், அபிராமம் போலீசார் சேம்பருக்கு வந்தார்கள். அவர்கள் கார்த்திக் அளித்த புகாரின் பேரில் வந்தார்களா என்றால் அடிபட்டவர் கொடுத்த புகாரால் வந்தார்கள்.

7. நள்ளிரவு 12 மணி முதல் மதியம் 2 மணி வரை வேலை செய்வோம். நாங்கள் எல்லோரும் ஒரே நேரத்தில் வேலைக்கு செல்வதில்லை. ஒவ்வொருவரும் வேறு வேறு நேரத்தில் வேலைக்கு செல்வோம்.

8. எங்களை மீட்டுச் சென்றதற்கு தாசில்தார் மீட்புச் சான்றிதழ் வழங்கினார். அது என் வீட்டில் உள்ளது. அதனை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த தயாராக உள்ளேன்.

9. எங்களுக்கு மறுவாழ்விற்கு ஏதேனும் பணம் கொடுத்தார்களா என்றால் எங்களை திருச்சுழிக்கு அழைத்துச் சென்று மறுநாள் காலை 10, 11 மணிக்கு தாசில்தார், RDO, விருதுநகர் தாசில்தார் வந்து ஆளுக்கு 1000 ரூபாய் கொடுத்து ஊரில் கொண்டு விட்டுவிட்டார்கள்.

10. District bonded labour rehabilitation fund கணக்கிலிருந்து ரூபாய் 20,000/– எங்கள் ஒவ்வொருவருக்கும் கொடுத்தார்களா என்றால் நாங்கள் ஊருக்கு சென்ற மறுநாள் எங்கள் வழக்கறிஞர் எங்களுக்கு தகவல் தெரிவித்ததால் காரியாபட்டியிலுள்ள வட்டாட்சியர் அலுவலகத்திற்கு சென்று ஒரு குடும்பத்திற்கு ரூ.19,000/–க்கு கொடுத்த காசோலையை பெற்றுக்கொண்டோம். இந்த விபரங்களை போலீஸ் விசாரணையில் தெரிவிக்கவில்லை.

11. வருவாய்த்துறை அதிகாரிகள் எங்களை சேம்பரில் வைத்து தனித்தனியாக விசாரித்தார்களா என்றால் மொத்தமாக வைத்து விசாரித்தார்கள். தனியாக வைத்து விசாரிக்கவில்லை. எங்களை விசாரிக்க ஒன்றரை மணி நேரங்கள் ஆனது. திருச்சுழியில் உள்ள முகாமில் வைத்து எழுதினார்கள். சேம்பரில் வைத்து எழுதவில்லை. நாங்கள் முகாமிற்கு இரவு 11 மணிக்கு சென்றோம். மறுநாள் மதியம் 11 மணி வரை இருந்தோம்.

12. தாசில்தார் போலீசார் வந்தவுடன் முதலாளி இல்லை. கணக்குப்பிள்ளை இருந்தவர் ஓடிவிட்டார். இந்த விபரங்களை போலீஸ் விசாரணையில்

தெரிவிக்கவில்லை.

13. சேம்பரில் வேலை பார்த்த பாதுகாவலர் இருந்தார். அவரை விசாரித்தார்களா என்று எனக்கு தெரியாது.

14. சேம்பரின் உரிமையாளர் யார் என்பது குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியும். ஆஜர் எதிரிதான் உரிமையாளர். அவர் உரிமையாளர் என்பதற்கு ஏதேனும் ஆவணங்களை பார்வையிட்டுள்ளீர்களா என்றால் ஆவணங்களை எதையும் பார்க்கவில்லை. உரிமையாளர் சேம்பருக்கு வருவதை வைத்து தெரிந்து கொண்டோம். அதோடு நாங்கள் மூர்த்தியிடமிருந்து தான் பணம் பெற்றோம் என்பதால் அவர் தான் உரிமையாளர் என்று தெரிந்து கொண்டோம்.

15. மூர்த்தியிடமிருந்து பணம் பெற்றுக் கொண்டோம் என்பதற்கோ மூர்த்தி தான் எங்களை வேலைக்கு அமர்த்தினார் என்பதற்கோ எந்த ஆவணங்களும் இல்லை என்றால் சரியல்ல. பணம் கொடுக்கும்போது ஒரு நோட்டில் எழுதி கையெழுத்து வாங்கிக் கொண்டார்கள். அதை மூர்த்தியே வைத்துக் கொண்டார். அதை எங்களுக்கு கொடுக்கவில்லை. நாங்கள் வேலை செய்வதை பற்றி மட்டும் நாங்கள் வைத்திருந்த நோட்டில் எழுதிக் கொடுப்பார்கள். அந்த நோட்டுப்புத்தகத்தை திருச்சுழியில் வைத்து தாசில்தார் வாங்கிக் கொண்டார்.

16. நான் 100 நாள் வேலைக்கு செல்வதுண்டு. புத்தாண்டு முடிந்து வேலைக்கு சென்று 6 மாதங்கள் வேலை செய்தேன். வைகாசி மாதத்தில் பிரச்சனை வந்தது.

17. 10 குடும்பங்களும் ஒரே காலத்தில்தான் வேலைக்கு சென்றோம். நாங்கள் சொன்ன காலத்தில் சுகன்யா சேம்பருக்கு வேலைக்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. வேறு இடத்திற்கு வேலைக்கு சென்றோம் என்றால் சரியல்ல. வேலை செய்தததாக சொன்ன காலங்களில் ரேஷன் கடையில் பொருட்கள் வாங்கியுள்ளோம் என்றால் சரிதான்.

(S/d. ஜெ. சங்கீதா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.